# AIA SHE PROTECT

## பெண்களுக்கான பரிபூரணமானதோர் ஆயுள் காப்பீட்டுத் தீர்வு



AIA இன்ஷூவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

# நாம் வாழ்க்கை என்றழைக்கும் பயணம் பல்வேறு மைல்கற்களைக் கொண்டுள்ளது. இப்பயணத்தில் பெண்களாக நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்டத்தில் இருக்கிறோம்.

ஆனால் நாம் எந்த நிலையில் இருந்தாலும், கிட்டத்தட்ட அனைவருக்கும் பொதுவான மற்றும் நிலையான ஒரு விடயம் இருக்கின்றது. அதுதான் குடும்பமாகும். நாம் அதிகமாக அன்பு வைத்திருக்கும் மற்றும் நேசித்துப் பாதுகாக்கும் எமது அன்பிற்குரியவர்களுக்குச் சிறந்தவற்றைத் தவிர வேறொன்றையும் நாம் வேண்டுவதில்லை. அவர்கள் எமது பெற்றோர்கள், எமது பிள்ளைகள், வாழ்க்கைத் துணை போன்றவர்களாகவும் இருக்கலாம், எனினும் உண்மையில் எம் அனைவருக்கும் குடும்பம் ஒன்று இருக்கின்றது. மேலும் அவர்களை மிகவும் நன்றாகப் பார்த்துப் பராமரிப்பது எம்மிலேயே தங்கியுள்ளது. நாங்கள், பெண்களாக பலவற்றை செய்கிறோம் ஆனால் எங்கள் குடும்பத்தில் முக்கிய பாத்திரங்களை வகிக்கிறோம்.




## எனினும் நாம் அவர்களுடன் இல்லாத போது எங்கள் குடும்பத்திற்கு என்ன நடக்கும்? அவர்களை யார் கவனித்துக் கொள்வார்கள்?

நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், உங்கள் குடும்பம் நீங்கள் இனி இல்லை என்ற சூழ்நிலைக்கு ஆளாகும்போது பாதுகாப்பாக இருக்க வேண்டும். நீங்கள் இல்லாத நேரத்திலும் அவர்கள் பழகிய வாழ்க்கை முறையைத் தொடர நிதி ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டும்.


# AIA SHE PROTECT

## உங்களையும் உங்கள் அன்பிற்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட பரிபூரணமான ஆயுள் காப்புறுதித் திட்டமாகும்.


AIA She Protect என்பது பெண்களின் பாதுகாப்புத் தேவைகளை கருத்திற்கொண்டு மலிவு விலையில் தனிப்பயனாக்கப்பட்ட ஓர் தீர்வாகும். AIA She Protect மூலம், உங்கள் தனிப்பட்ட தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் 6 விருப்பத் தேர்வுகளுடன் நீங்கள் பெறும் பாதுகாப்பினை தெரிவு செய்யலாம். நீங்கள் எந்த வாழ்க்கை நிலையில் இருந்தாலும் உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் சிறந்த நிதிப் பாதுகாப்பினை நாங்கள் வழங்குகிறோம்.

### AIA SHE PROTECTன் நன்மைகள்



நிரந்தர இயலாமை அனுகூலம்



குடும்ப வருமான அனுகூலம்



கட்டுப்பண பாதுகாப்பு அனுகூலம்



37 பாரதூரமான நோய் அனுகூலம்



கட்டுப்பணங்களைத் திரும்பிச் செலுத்தல் அனுகூலம்



விபத்து மூலமான மரண அனுகூலம்

## உங்களுக்குத் தெரியுமா?

**5%**

**உங்கள் மாறிவரும் வாழ்க்கை முறைத் தேவைகள், வருமான நிலைகள், மற்றும் செலவுகள் போன்றவற்றை ஈடுசெய்வதற்காக உங்களுடைய ஆயுள் அனுகூலம் ஒவ்வொரு வருடமும் 5% இனால் அதிகரிக்கின்றது.**

## அதிகரிக்கும் ஆயுள் அனுகூலம்



இயற்கையாக உங்களுக்கு மரணம் சம்பவிக்குமானால் உங்கள் பயனாளிகள் ஆயுள் அனுகூலத்தினைப் பெறுவார்கள்.

ஆயுள் அனுகூலமானது காப்புறுதிக் காலத்தின் நிறைவு வரை அல்லது மரண இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்று கோரப்படும் வரை எளிய நேர்கோட்டு அடிப்படையில் ஒவ்வொரு காப்புறுதித் திட்ட வருடாந்தப் பூர்த்தியின் போது 5% இனால் அதிகரிக்கப்படும்.

**ரூபா.1 மில்லியன் மற்றும் ரூபா. 500 மில்லியனிற்கு இடையில் ஆயுள் அனுகூலத் தொகையினைத் தெரிவு செய்யலாம்.**

## குடும்ப வருமான அனுகூலம் (விருப்பத்தெரிவு)




விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் நீங்கள் மரணித்தால் அல்லது முழுமையான நிரந்தரமான இயலாமையினால் பாதிக்கப்பட்டால் (TPD) அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்த வருமானம் ஒன்றை உங்கள் பயனாளிகள் பெறுவார்கள்.

ரூபா. 10,000 மற்றும் அதற்கு மேலான தொகை ஒன்றிலிருந்து உங்கள் குடும்பத்திற்குத் தேவைப்படும் மாதாந்த வருமானத் தொகையினை நீங்கள் தெரிவு செய்ய முடியும்.

**உங்கள் காப்புறுதித் திட்டத்தின் ஆரம்பத்திலுள்ள குடும்ப வருமான அனுகூலத் தொகையானது மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தக்கூடியதாக மாறும் வரையில் ஒவ்வொரு காப்புறுதித் திட்ட வருடாந்தப் பூர்த்தியில் 5% இனால் (எளிய நேர்கோட்டு அடிப்படையில்) அதிகரிக்கப்படும்.**

# ஏனைய விருப்பத்தெரிவு அனுகூலங்கள்



## நிரந்தர இயலாமை அனுகூலங்கள்

முழுமையான நிரந்தரமான இயலாமை - விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் முழுமையான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட அனுகூலத் தொகையினை நீங்கள் பெறுவீர்கள்.

பகுதியளவான நிரந்தரமான இயலாமை - விபத்தொன்றின் மூலமாக பகுதியளவான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால், உங்கள் காப்புறுதித் திட்ட ஆவணத்திலுள்ள அனுகூலங்களின் அட்டவணையின் அடிப்படையிலுள்ள அனுகூலத் தொகை வரை நீங்கள் பெறுவீர்கள்.



## பாரதூரமான நோய் அனுகூலம்

நீங்கள் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு 37 பாரதூரமான நோய்களினால் நோய்க்குணங்குறி கண்டறியப்பட்டால் அல்லது சத்திரசிகிச்சைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தால் உங்களுக்கு அனுகூலத் தொகை செலுத்தப்படும்.




## செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலம்


காப்புறுதிக் காலத்தில் நீங்கள் உயிருடன் இருந்தால் காப்புறுதிக் காலத்தின் இறுதியில் நீங்கள் செலுத்திய அனைத்துக் கட்டுப்பணங்களையும் AIA உங்களுக்கு திருப்பிச் செலுத்தும்.

காப்புறுதிக் காலத்தின் போது நீங்கள் மரண இழப்பீட்டுக் கோரிக்கையைத் தவிர வேறு எந்தவொரு இழப்பீட்டுக் கோரிக்கையினை ஏற்படுத்தியிருந்தாலும் இந்த அனுகூலமானது உங்களுக்குச் செலுத்தப்படும்.




## கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்

விபத்தொன்றின் மூலமாக அல்லது நோயினால் முழுமையான நிரந்தரமான இயலாமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால் உங்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதிக் காலத்தின் இறுதி வரையில் AIA உங்கள் சார்பாக கட்டுப்பணங்களைச் செலுத்தும்.



## விபத்து மூலமான மரண அனுகூலம்

விபத்தொன்று காரணமாக துரதிஷ்டமான மரணம் சம்பவிக்குமானால், பயனாளிகள் ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக விபத்து மூலமான மரண அனுகூலத் தொகையினைப் பெறுவார்கள்.

ஆயுள் அனுகூலத்தின் அதிகபட்ச 2 மடங்கு காப்பீட்டுத் தொகையினைத் தெரிவு செய்ய முடியும். குறைந்தபட்சத் தொகையானது ஆரம்ப ஆயுள் அனுகூலத்திற்குச் சமமான தொகையாக இருக்கும்.

# AIA SHE PROTECT எப்படி செயற்படும்?

**சந்தனிக்கு 35 வயது (அடுத்த பிறந்த நாளில்). சந்தனி திருமணமாகி தனது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து வருகிறார்.**

சந்தனி AIA இணை 'செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை திரும்பிச் செலுத்தல்' அனுகூலம் மற்றும் பின்வரும் விருப்பத் தேர்வுகளுடன் கொள்வனவு செய்தார்.



வயது: **35**
காப்புறுதி காலம்: **25**

ஆயுள் அனுகூலம் **ரூ. 5 மில்லியன்**

+

**தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பப் பலன்கள்**

- கட்டுப்பணங்களைத் திரும்பிச் செலுத்தல் அனுகூலம்
- நிரந்தர இயலாமை அனுகூலம் **ரூ. 5 மில்லியன்**
- கட்டுப்பண பாதுகாப்பு அனுகூலம்
- விபத்து மூலமான மரண அனுகூலம் **ரூ. 5 மில்லியன்**
- குடும்ப வருமான அனுகூலம். **மாதமொன்றிற்கு 50,000 ரூபா.**


வருடாந்த கட்டுப்பணம் **ரூ. 112,814**

**சந்தனி மற்றும் அவரது குடும்பத்திற்கு காப்புறுதி காலத்தின் போது எவ்வாறு AIA She Protect உதவியது**

## 11ஆம் ஆண்டில் சந்தனி நிரந்தர இயலாமைக்கு உற்பட்டால், AIA She Protect இனூடாக பின்வரும் பலன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**அதிகரித்த குடும்ப வருமான அனுகூலம்**

ரூ. 50,000 வருடாந்தம் (ரூ. 2,500) 5% இனால் அதிகரிக்கின்றது. மேலும் 11வது வருடத்தில் FIB ரூ. 75,000 ஆக இருக்கும்.






**2** **ஏற்கனவே செலுத்தப்பட்ட நிரந்தர இயலாமை அனுகூலத்திற்கு (ரூ. 5 மில்லியன்) மேலதிகமாக அடுத்த 5 வருடங்களுக்கு மாதாந்தம் ரூ. 75,000 வீதம் செலுத்தப்படும்.**



**1** **நிரந்தர இயலாமை அனுகூலமான ரூ. 5 மில்லியன்** சந்தனிக்கு உடனடியாக வழங்கப்படும்.



**3** மீதமுள்ள காப்புறுதிக் காலத்திற்கு சந்தனி சார்பாக AIA **கட்டுப்பணத்தைச் செலுத்தும்.**



**4** சந்தனி செலுத்திய கட்டுப்பணங்களுடன் AIA இனால் செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களையும் சேர்த்து **அனைத்து கட்டுப்பணங்களையும் AIA திருப்பித் தரும்.**

**ரூ. 2,820,350** (ரூ. 112,814x25)

# ஏனைய முக்கியமான காப்புறுதித் திட்டத் தகவல்கள்

| காப்புறுதிக் காலம்/ கட்டுப்பணம் செலுத்தல் காலம் | 10 வருடங்கள் | 15 வருடங்கள் | 20 வருடங்கள் | 25 வருடங்கள் | 30 வருடங்கள் |
|---|---|---|---|---|---|
| கட்டுப்பண முறை | வருடாந்தம், அரையாண்டாக, காலாண்டாக, மாதாந்தமாக | | | | |

| நுழைவு வயதுகள் மற்றும் காப்பீட்டினை முடிவுறுத்தும் வயதுகள் (அடுத்த பிறந்த தினத்தில்) | | குறைந்தபட்ச நுழைவு வயது (அடுத்த பிறந்த தினத்தில்) | அதிகபட்ச நுழைவு வயது (அடுத்த பிறந்த தினத்தில்) | காப்பீட்டை முடிவுறுத்தும் வயது |
|---|---|---|---|---|
| | ஆயுள் அனுகூலம் | 19 வருடங்கள் | 66 வருடங்கள் | 75 வருடங்கள் |
| | விருப்பத்தெரிவு அனுகூலங்கள் | 19 வருடங்கள் | 66 வருடங்கள் | 75 வருடங்கள் |

| செலுத்தப்பட்ட கட்டுப்பணங்களைத் திருப்பிச் செலுத்தல் அனுகூலம் | நீங்கள் 25 மற்றும் 30 வருடங்களாக காப்புறுதிக் காலங்களைத் தெரிவு செய்தால் மட்டுமே இது உங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் |
|---|---|

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

இந்தக் காப்புறுதித் திட்டத்தினை உரிமம் பெற்ற AIA வெல்த் பிளேனர், AIA நிதியியல் திட்டமிடல் அதிகாரி அல்லது அங்கீகாரம் பெற்ற தரகர் ஒருவரிடமிருந்து மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களுடைய விருப்பத் தெரிவிற்கு ஏற்றவாறு காப்புறுதித் திட்டம் ஒன்றை மற்றும் / அல்லது காப்புறுதி வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான உரிமையையும் மற்றும் / அல்லது வங்கி ஒன்றினால் அல்லது வேறு எந்தவொரு நிதியியல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு நிதியியல் திட்டங்கள் அல்லது சேவைகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டு அல்லது தொகுக்கப்பட்டு வழங்கப்படுகின்ற எந்தவொரு காப்புறுதித் திட்டத்தினையும் மறுப்பதற்கான உரிமையையும் நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள்.

இது காப்புறுதித் திட்டத்தின் கண்ணோட்டம் மட்டுமே ஆகும். நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும். முழுமையான காப்புறுதித் திட்டம் தொடர்பான விபரங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குத் தயவு செய்து காப்புறுதி ஆவணத்தை வாசிக்கவும். காப்புறுதித் திட்டத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பிரகடனங்களை விரிவாக விளக்கும் உங்கள் முன்மொழிவுப் படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உங்களுக்கு விற்பனை விளக்கம் மற்றும் விலைமனு ஒன்று வழங்கப்படும்.

SHP/300000409/V1/07/22

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இனால் வெளியிடப்பட்டது. 05/07/2022

HEALTHIER, LONGER,
BETTER LIVES

AIA நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு காப்புறுதிக்காகவும் ரூ. 100 இனை இலங்கை புற்று நோயாளர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க வாக்குறுதியளிக்கின்றோம்.